செ.வெ.எண்:14 நாள்:06.07.2021

கரூர் மாவட்டம்

**கரூர் மாவட்டம், தாந்தோணி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 274 குடியிருப்புகளுக்கான காவிரி கூட்டுக் குடிநீர் திட்ட பணிகள் விரைவில் முடிக்கப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திட்டம் தொடங்கிவைக்கப்பட உள்ளது – திட்டப்பணிகளை பார்வையிட்ட மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.த.பிரபுசங்கர்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

கரூர் மாவட்டம் கிருஷ்ணராயபுரம் வட்டம் மேலமாயனூர் காவிரி ஆற்றுப்பகுதியில் தாந்தோணி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 274 குடியிருப்புகளுக்கான காவிரி கூட்டுக் குடிநீர் திட்ட பணிகள் நடைபெற்று வருவதையும், வதியம், ரத்தினம்பிள்ளைபுதூர், வலையப்பட்டி, கள்ளை உள்ளிட்ட பகுதிகளில் குளித்தலை மற்றும் தோகமலை ஒன்றியங்களுக்கான காவிரி கூட்டுக் குடிநீர் திட்ட பணிகள் செயல்படுத்தப்பட்டு வருவதையும், இன்று (06.07.2021) மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.த.பிரபுசங்கர்,இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

பின்னர் மாவட்ட ஆட்சித்லைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

கரூர் மாவட்டம், தாந்தோணி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 274 குடியிருப்புகளுக்கான காவிரி கூட்டுக் குடிநீர் திட்டமானது 2020ம் ஆண்டை அடிப்படை ஆண்டாக கணக்கிட்டு 64320 மக்கள் தொகையும், இடைநிலை ஆண்டு 2035க்கு 73350 மக்கள் தொகையும், உச்சநிலை ஆண்டு 2050க்கு 56150 மக்கள் தொகையும் இலக்காக கொண்டு ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு 55 லிட்டர் வீதம் கணக்கிட்டு, இடைநிலை ஆண்டுக்கு 4.50 மில்லியன் லிட்டர், உச்சநிலை ஆண்டுக்கு 5.31 மில்லியன் லிட்டர் வீதம் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. தாந்தோணி ஊராட்சி ஒன்றியத்தில் மொத்தமுள்ள 314 குடியிருப்புகளில் ஏற்கனவே 175 குடியிருப்புகளுக்கு ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு 30 லிட்டர் வீதம் காவிரி குடிநீர் 3 கூட்டுக்குடிநீர் திட்டம் மூலம் வழங்கப்படுகிறது. மேலும் 2015ஆம் ஆண்டு முடிவுற்று பயன்பாட்டில் உள்ள பள்ளபாளையம், ஆண்டாங்கோவில் மேல் மற்றும் கீழ்பாகம் ஊராட்சிகளில் உள்ள 40 குடியிருப்புகளுக்கு காவிரி நீர் வழங்கப்படுகிறது. மீதமுள்ள 14 ஊராட்சிகளில் உள்ள விடுபட்டு போன 99 குடியிருப்புகள் உள்ளது. இந்த 99 குடியிருப்புகளிலும் ஊராட்சி அமைப்புகள் மூலம் நிலத்தடி நீர் கொண்டு குடிநீர் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. இந்த நிலத்தடி நீர் ஆதாரங்கள் பல இடங்களில் குடிப்பதற்கு உகந்ததாக இல்லை. மேலும் தாந்தோணி ஊராட்சி ஒன்றியமானது 100சதவிதத்திற்கு மேல் நிலத்தடி நீர் உறுஞ்சப்படுவதாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. கோடை காலங்களில் ஆழ்துளை கிணற்றில் நீர் மட்டமானது மிகவும் கீழே சென்றுவிடுகிறது அல்லது வறண்டு விடுகிறது. எனவே தாந்தோணி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 274 குடியிருப்புகளுக்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் வீதம் வழங்கும வகையில் இந்த புதிய காவிரி கூட்டுக் குடிநீர் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தில் மேலமாயனூர் அருகே நீர் சேகரிப்பு கிணறு மூலம் தேவையான நீர் 400 மி.மீ குழாய்கள் மூலம் 19528 மீட்டர் தொலைவில் உள்ள புதிதாய் கட்டப்படவுள்ள 14.60 லட்சம் லிட்டர் கொள்ளவுள்ள பெருமாள்பட்டி தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் கட்டளையில் பயன்பாட்டிலுள்ள ஓர் நீர் உறிஞ்சி கிணறு மூலம் தேவையான நீர், ஏற்கனவே பயன்பாட்டிலுள்ள 3.15 லட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள ஏமூர் புதூர் தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு 225 மி.மீ குழாய்கள் மூலம் குடிநீர் ஏற்றப்படுகிறது.

இத்திட்டத்தில் மொத்தம் 25 தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டிகள் மூலமும், பயன்பாட்டிலுள்ள 292 மற்றும் புதியதாய் கட்டப்படவுள்ள 43 மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிகளில் நீர் ஏற்றப்பட்டு ஏற்கனவே உள்ள மற்றும் புதிதாய் அமைக்கப்படவுள்ள 14500 மீட்டர் பகிர்மானக் குழாய்கள் மூலம் குடிநீர் விநியோகம் நடைபெற உள்ளது.

இத்திட்டத்தின் மொத்த திட்ட மதிப்பீடு ரூ.8141 லட்சம் ரூபாய் ஆகும். இத்திட்டத்திற்கு 28.02.2019ம் தேதி வேலை உத்தரவு வழங்கப்பட்டு, திட்டமானது 27.03.2019 அன்று தொடங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. இதுவரை சுமார் 95 சதவிகித பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் விரைவில் முடிக்கப்பட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தொடங்கிவைக்கப்பட உள்ளது.

அதேபோல் குளித்தலை மற்றும் தோகைமலை ஒன்றியங்களில் உள்ள 253 குடியிருப்பு பகுதிகளுக்கு ரூ.5275 இலட்சம் மதிப்பில் செயல் படுத்தப்பட்டுள்ள கவிரி கூட்டு குடிநீர்திட்டப்பணிகள் அனைத்தும் இம்மாத இறுதிக்குள் முக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர சமந்தப்பட்ட துறைசார்ந்த பொறியாளர்களுக்கு தகுந்த ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது. என தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது மாவட்ட ஊரகவளர்ச்சித்துறை திட்ட இயக்குநர் திரு.பாலகணேஷ், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய நிர்வாக பொறியாளர் திரு.பிரபுராம், வட்டாச்சியர்கள் திரு.கலியமூர்த்தி(குளித்தலை), திரு.மகுடீஸ்வரன் (கிருஷ்ணராயபுரம்) உதவி நிர்வாகபொறியாளர்கள் திரு.வாசுதேவன், திரு.செங்குட்டுவன், உதவி பொறியாளர்கள் திரு.யோகராஜ், திரு.சேகர், கீழமாயனூர் ஊராட்சிமன்ற தலைவர் திருமதி.கற்பகவள்ளி உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.**